கனம் கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருமங்கலம்.

முன்னிலை : திரு. E.மணிகண்டன், B.A., B.L.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.

2025–ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 06ம் தேதி புதன்கிழமை
இடைநிலை மனு எண்.1/2024
இன்
அசல் வழக்கு எண்.124/2024
* * * *

பழனி ... மனுதாரர்/வாதி

/ எதிர்/

செண்பகராஜன் ... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனுவானது 07.07.2025–ல் இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.வேலுச்சாமி அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.G.சிவசுப்பிரமணியன் அவர்கள் ஆஜராகியும், இருந்து வந்த மனுவில், இருதரப்பு வாதுரைகளுக்கு போதிய வாய்ப்பளித்தும், மனு மற்றும் வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் முன் பரிசீலனையின் கீழ் இருந்து வந்த மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**<u>உத்தரவு</u>**

தாவாச்சொத்தினை பொறுத்து இந்நிர் எதிர்மனுதாரர்களோ/ பிரதிவாதிகளோ, அவர்களது வகையறா ஆட்களோ எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என்று அசல் வழக்கு முடியும் வரை இந்நிர் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக ஒரு இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், இம்மனு நிலுவையில் இருக்க எதிரவர் இல்லா நிலையில், ஒரு இடைக்கால தடையுறுத்தரவு பிறப்பிக்க கோரியும் உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டம் கட்டளை 39 விதி 1, 2 மற்றும் பிரிவு 151–ன் கீழ் மனுதாரர்/வாதியால் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>1. தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை</u>** :–

இந்நிர் மனுதாரர்கள்/வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவானது சட்டப்படி நிலைக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

1.1) தாவாச்சொத்தினை பொறுத்து இந்நிர் எதிர்மனுதாரர்களோ/ பிரதிவாதிகளோ, அவர்களது வகையறா ஆட்களோ எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என்று அசல்

வழக்கு முடியும் வரை இந்நிர் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக ஒரு இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், இம்மனு நிலுவையில் இருக்க எதிரவர் இல்லா நிலையில், ஒரு இடைக்கால தடையுறுத்தரவு பிறப்பிக்க கோரியும் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில், அசல் வழக்கில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை இம்மனுவின் எதிருரையாக பாவித்துக்கொள்ள வேண்டி குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) இருதரப்பு வாதுரைக்கும் போதிய வாய்ப்பு அளிக்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலினை செய்யப்பட்டது. இருதரப்பிலும் சாட்சி, சான்றாவணங்கள் எதுவும் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

**3. தீர்வு:-**

3.1) மனுதாரர்/வாதி தரப்பிற்கு இடைக்கால தடை உத்தரவு வழங்குவதற்கு முகாந்திரம் உள்ளது என்பதை காட்டுவதற்கும் அவரது தரப்பு வழக்கினை வலுப்படுத்தும் வகையில் எந்தவொரு

ஆவணமோ சாட்சியோ, வாய்மொழி சாட்சியமோ முன்னிலைப்படுத்தப்படவில்லை. கட்டளை 39 விதி 1, 2 CPC கீழ் மனுதாரர் நிவாரணம் பெற

(i) மனுதாரரின் வழக்கிற்கு முதற்தோற்ற வழக்கு இருக்கவேண்டும்.

(ii) மேற்படி நிரந்தர தடையுறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்காவிட்டால் மனுதாரருக்கு பணத்தால் ஈடு செய்ய முடியாத இழப்பும் துன்பமும் ஏற்படும் என்றும், Balance of convenience மனுதாரருக்கு ஆதரவாக உள்ளது என்று நிருபணம் செய்யவேண்டியது அவசியமானதாகும். ஆனால், இம்மனுவில் மேற்படியான நிபந்தனைகளை நிரூபணம் செய்யும் விதமாக மனுதாரர்/வாதி தரப்பில் வாய்மொழி சாட்சியங்களோ, ஆவண சாட்சியமோ முன்னிலைப்படுத்தவில்லை.

3.2) மேற்படி அசல் வழக்கின் பரிகாரமானது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரமாக இருப்பதால், மேற்படி மனுவினை அனுமதிக்காததால் மனுதாரர்/வாதிக்கு பணத்தால் ஈடுசெய்ய முடியாத இழப்பு ஏற்படும் என்று நிரூபணம் செய்யாததாலும், அசல்

வழக்கில் தீர்வு காணவேண்டிய பிரச்சனையும், இம்மனுவில் தீர்வு காணவேண்டிய பிரச்சனையும் ஒன்றாக இருப்பதாலும், வழக்குச்சொத்தை பொறுத்து மனுதாரர்/வாதிக்கு தடையுறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கத்தக்கதா? என்பதை முழு விசாரணைக்கு பின்பு தான் தீர்வு காண இயலும் என்பதாலும், மேற்படி காரணங்களை கருத்தில் கொண்டு இம்மனுவானது இந்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

**முடிவாக,** மனுதாரர்/வாதி கோரியுள்ள இடைக்கால தடையுறுத்தரவு கட்டளை பரிகாரம் மனுதாரர்/வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று இந்த மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவு தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, பின்னர் இன்று 06.08.2025ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(ஒம். E.மணிகண்டன்),
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.

**இணைப்பு :–**

**1) மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள்:** இல்லை
**2) மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்**: இல்லை
**3) எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் :** இல்லை
**4) எதிர்மனுதாரர்கள் சான்றாவணங்கள்:** இல்லை

(ஒம். E.மணிகண்டன்),
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.

இடைநிலை மனு எண்.1/2024
இன்
அசல் வழக்கு எண்.124/2024
வரைவு/செவ்வை உத்தரவு
நாள்:06.08.2025